$$C_{12}H_{22}O_{11} + H_2O \xrightarrow{\text{இன்வர்டேஸ்}} C_6H_{12}O_6 + C_6H_{12}O_6.$$

$$C_6H_{12}O_6 \xrightarrow{\text{சைமேஸ்}} C_2H_5OH + 2CO_2$$

- 95.5% எத்தனால் 4.5% நீர் கலந்த கலவை எரிசாராயம் எனப்படும்.
- சுண்ணாம்பு, சேர்த்து காய்ச்சி வடிக்க, 100% தூய ஆல்கஹால் கிடைக்கும்

12.தாவர உள்ளமைப்பியல் மற்றும் தாவர செயலியல்

1. இருவித்திலைத் தாவரத் தண்டின் வாஸ்குலார் கற்றையின் அமைப்பைப் பற்றி எழுதுக.

- வாஸ்குலார் கற்றைகள் ஒன்றிணைந்தவை, ஒருங்கமைந்தவை, திறந்தவை மற்றும் உள்நோக்கு சைலம் கொண்டது.
- பித்தைச் சுற்றி ஒரு வளையமாக உள்ளது.

2. இலையிடைத் திசு (மீசோபில்) பற்றி குறிப்பு எழுதுக.

- இருவித்திலைத் தாவர இலையின் மேல் மற்றும் கீழ் புறத் தோலுக்கும் இடையே உள்ள தளத்திசு ஆகும்.
- இதில் பாலிசேட் மற்றும் ஸ்பாஞ்சி பாரன்கைமா செல்கள் உள்ளது.
- பாலிசேட் பாரன்கைமா மேல்புறத் தோலுக்கு கீழே நெருக்கமாக, நீளமான, பசுங்கணிகங்களுடன் ஒளிச்சேர்க்கை பணியை மேற்கொள்கிறது.
- ஸ்பாஞ்சி பாரன்கைமா பாலிசேட் பாரன்கைமாவிற்கு கீழே கோள அல்லது உருளை அல்லது ஒழுங்கற்ற செல்கள் வாயு வரிமாற்றத்திற்கு உதவுகிறது.

3. ஒளிச்சேர்க்கை என்றால் என்ன? செல்லில் எங்கு நடைபெறுகிறது.

1. பச்சையம் நிறமிகளைக் கொண்ட தாவரங்கள், ஆல்காக்கள், பாக்டீரியங்கள் போன்றவைகளில் சூரிய ஆற்றலை வேதி ஆற்றலாக (ஸ்டார்ச்) மாற்றும் நிகழ்வு.

$$6CO_2 + 12H_2O \xrightarrow[\text{பச்சையம்}]{\text{சூரியஒளி}} C_6H_{12}O_6 + 6H_2O + 6O_2$$

2. இது செல்லின் பசுங்கணிகத்தின் உள்ளே நடைபெறுகிறது.

5. மலரும் தாவரங்களில் காணப்படும் மூன்று வகையான திசுத் தொகுப்புகளைக் குறிப்பிடுக.

- தோல் திசுத் தொகுப்பு (அ) புறத்தோல் திசுத் தொகுப்பு
- அடிப்படை (அ) தளத் திசுத் தொகுப்பு
- வாஸ்குலார் திசுத் தொகுப்பு

6. அ) ஒளிச்சேர்க்கையின் ஒளி வினை மற்றும் இருள் வினையின்போது கிடைக்கும் முக்கிய பொருட்கள் யாவை?

ஒளி வினை - O_2, H_2O
இருள் வினை - குளுக்கோஸ்

ஆ) ஒளிச்சேர்க்கை நிகழ்வில் சுழற்சியில் மீண்டும் மீண்டும் ஈடுபடும் வினைபடுபொருட்களை கூறுக.

ATP, $NADPH_2$

7. பசுங்கணிகத்தின் எந்தப் பகுதியில் ஒளி சார்ந்த செயல் மற்றும் கால்வின் சுழற்சி நடைபெறுகிறது?

1. ஒளி சார்ந்த செயல் - பசுங்கணிகத்தின் தைலக்காய்டு சவ்வில் நடைபெறுகிறது
2. கால்வின் சுழற்சி - பசுங்கணிகத்தின் ஸ்ட்ரோமா பகுதியில் நடைபெறுகிறது

8. இருவித்திலைத் தாவர மற்றும் ஒருவித்திலைத் தாவர இலைகளுக்கிடையேயான வேறுபாடுகளை எழுதுக.

இருவித்திலை தாவர இலை	ஒருவித்திலை தாவர இலை
1. மேல், கீழ் வேறுபாடு கொண்ட இலை	இருபக்கமும் ஒத்த அமைப்பு உடைய இலை
2. இலையிடைத் திசுப் பகுதியில் பாலிசேட் மற்றும் ஸ்பாஞ்சி பாரன்கைமா வேறுபாடு காணப்படுகிறது	வேறுபாடு காணப்படவில்லை

9. மைட்டோகாண்ட்ரியாவின் பணிகள் யாவை?

- சுவாசித்தல்
- ATP-க்கள் உற்பத்தி
- கால்சியம் அயனிகளின் சமநிலை பாதுகாத்தல்
- செல்லின் வளர்சிதை மாற்றத்தில் பங்கு பெறுதல்
- ஆற்றல் மையமாக செயல்படுதல்

10. ஒருவித்திலைத் தாவர வேர் மற்றும் இருவித்திலைத் தாவர வேர் வேறுபாடு தருக SEP-2020

	ஒருவித்திலைத் தாவர வேர்	இருவித்திலைத் தாவர வேர்
1.	பலமுனை சைலக் கற்றை	நான்குமுனை சைலம்
2.	கேம்பியம் இல்லை	உண்டு
3.	இரண்டாம் நிலை வளர்ச்சி இல்லை	உண்டு
4.	பித் உண்டு	இல்லை
5.	இணைப்புத் திசு ஸ்கிளீரன்கைமாவால் ஆனது	பாரன்கைமாவால் ஆனது

11. காற்றுள்ள சுவாசம் மற்றும் காற்றில்லா சுவாசம் வேறுபாடு SEP-2021

	காற்றுள்ள சுவாசம்	காற்றில்லா சுவாசம்
1.	ஆக்ஸிஜன் உள்ள சூழலில் சுவாசம்	ஆக்ஸிஜன் இல்லாத சூழலில்
2.	குளுக்கோஸானது ஆக்ஸிகரணம் அடைந்து CO_2 மற்றும் நீராக மாற்றமடைகிறது.	குளுக்கோஸானது தாவரங்களில் எத்தனாலாகவும், பாக்டீரியங்களில் லேக்டோஸாகவும் மாற்றப்படுதல்
3.	$C_6H_{12}O_6 \rightarrow 6CO_2 + 6H_2O + ATP$	$C_6H_{12}O_6 \rightarrow 2CO_2 + 2C_2H_5OH + ATP$

12. ஒளிசார்ந்த செயல் மற்றும் ஒளி சாராத செயலின் வேறுபாடு

	ஒளி சார்ந்த செயல்	ஒளி சாராத செயல்
1.	சூரிய ஒளியின் முன்னிலையில்	சூரிய ஒளி தேவையில்லை
2.	பசுங்கணிகத்தின் தைலக் காய்டில் நடைபெறுகிறது	பசுங்கணிகத்தின் ஸ்ட்ரோமாவில் நடைபெறுகிறது.
3.	ATP மற்றும் $NADPH_2$-வை உருவாக்குகிறது.	CO_2-வானது கார்போஹைட்ரேட்டாக ஒடுக்கமடைகிறது.

1. காற்று சுவாசிகள் செல் சுவாசத்தின்போது எவ்வாறு குளுக்கோஸிலிருந்து ஆற்றலை பெறுகிறது? அதன் மூன்று படிநிலைகளை விவரிக்கவும்.

செல் சுவாசத்தின்போது உணவானது ஆக்ஸிஜன் உதவியால் ஆக்ஸிகரணமடைந்து CO_2, நீர் மற்றும் ஆற்றலாக மாற்றப்படுகிறது.

காற்று சுவாசத்தின் படிநிலைகள்

1. கிளைக்காலிஸிஸ்
2. கிரப் சுழற்சி
3. எலக்ட்ரான் கடத்தும் சங்கிலி அமைப்பு

1. கிளைக்காலிஸிஸ் :

- ஒரு மூலக்கூறு குளுக்கோஸ் இரண்டு மூலக்கூறு பைருவிக் அமிலமாக பிளக்கப்படுதல்
- சைட்டோ பிளாசத்தில் நடைபெறுகிறது.
- காற்று மற்றும் காற்றில்லா சுவாசம் இரண்டிற்கும் பொது.

2. கிரப் சுழற்சி

- மைட்டோ காண்ட்ரியாவின் உட்புறத்தில் நடைபெறுகிறது.
- இரண்ட மூலக்கூறு பைருவிக் அமிலம் முழுவதும் ஆக்ஸிகரணமடைந்து CO_2-மற்றும் நீராக மாறுகிறது.
- ட்ரை கார்பாக்ஸிலிக் அமிலம் சுழற்சி (TCA) எனவும் அழைக்கப்படுகிறது.

3. எலக்ட்ரான் கடத்தும் சங்கிலி அமைப்பு :

- ❖ மைட்டோகாண்ட்ரியாவின் உட்புறத்தில் உள்ளது.
- ❖ இங்கு NADH2 மற்றும் $FADH_2$ ஆற்றலானது வெளியேற்றப்பட்டு NAD^+ மற்றும் FAD^+ ஆக ஆக்ஸிகரணமடைகிறது.
- ❖ வெளியான ஆற்றல் ADP-யால் எடுத்துக்கொள்ளப்பட்டு ATP ஆக உருவாகிறது.
- ❖ ஆக்ஸிகரண பாஸ்பேட் சேர்ப்பு எனவும் அழைக்கப்படுகிறது.
- ❖ வெளியேற்றப்பட்ட எலக்ட்ரானை ஆக்ஸிஜன் எடுத்துக்கொண்டு H_2O-ஆக ஒடுக்கமடைகிறது.

  $\mathbf{C_6H_{12}O_6} + 6O_2 \rightarrow 6CO_2 + 6H_2O + ATP.$

13. உயிரினங்களின் அமைப்பு நிலைகள்

1. அட்டையின் இதய அமைப்புக்கேற்ப அதன் சுற்றோட்ட மண்டலம் எவ்வாறு வடிவமைக்கப்பட்டுள்ளது ?

- ■ **இரத்த உடற்குழி மண்டலம் மூலம் அட்டையில் சுற்றோட்டம் நடைபெறுகிறது.**
- ■ **உண்மையான இரத்தக் குழாய்கள் இல்லை .இரத்தக்குழாய்களுக்குப் பதிலாக இரத்தம் போன்ற திரவத்தால் நிரப்பப்பட்ட இரத்த உடற்குழிக் கால்வாய்கள் அமைந்துள்ளன.**
- ■ **இந்த உடற்குழி திரவமானது ஹீமோகுளோபினைக் கொண்டுள்ளது.**
- ■ **சுற்றோட்ட மண்டலத்தில் நான்கு நீண்ட கால்வாய்கள் உள்ளன .**
- ■ **ஒரு கால்வாய்உணவுப்பாதையின் மேல் புறமாகவும், மற்றொரு கால்வாய் உணவுப் பாதையின் கீழ்ப்புறமாகவும் அமைந்துள்ளது .**
- ■ **மற்ற இரு கால்வாய்களும் உணவுப்பாதையின் இரு பக்கங்களிலும் அமைந்துள்ளன .**
- ■ **இவ்விரு கால்வாய்களும் உட்புறம் வால்வுகளைக் கொண்டு, இதயம் போன்று செயல்படுகின்றன .**
- ■ **நான்கு கால்வாய்களும் கீழ்ப்புறத்தில் 26 ஆவது கண்டத்தில் ஒன்றாக இணைகின்றன**

2 அட்டையில் நடைபெறும் இடப்பெயர்ச்சி நிகழ்ச்சியின் படிநிலைகளை எழுதுக . PTA-QN

- ➢ **அட்டை, தளத்தில் 1) வளைதல் அல்லது ஊர்தல் முறையிலும்,**
- ➢ **நீரில் 2) நீந்துதல் முறையிலும் இடப்பெ யர்ச்சி செய்கிறது.**

1) <u>வளைதல் அல்லது ஊர்தல் இயக்கம்</u> :

- ✓ **தசைகளின் சுருக்கம் மற்றும் நீள்தல் மூலம் நடைபெறுகிறது.**

✓ இவ்வியக்கத்தின்போது ஒட்டிக்கொள்வதற்கு இரு ஒட்டுறிஞ்சிகளும் உதவுகின்றன.

2) நீந்துதல் இயக்கம் :

✓ அட்டையானது நீரில் மிகுந்த செயலாக்கத்துடன் நீந்தி, அலை இயக்கத்தை மேற்கொள்கிறது .

3 முயலின் ஆண் இனப்பெருக்க மண்டலத்தைப் படம் வரைந்து விளக்குக.



படம் 13.11 முயல் – ஆண் இனப்பெருக்க மண்டலம்

- முயலின் ஆண் இனப்பெருக்க மண்டலம் ஓரிணை விந்தகங்கள் மற்றும் அவற்றோடு தொடர்புடைய நாளங்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.
- விந்தகங்கள் விந்து செல்களை உற்பத்தி செய்கின்றன .
- விந்தகங்கள் வயிற்றுக்கு வெளியே தொங்கிக் கொண்டிருக்கும், தோலாலான விதைப்பைகளினுள் அமைந்துள்ளன.
- ஒவ்வொரு விந்தகமும் விந்து நுண்குழல்என்ற சுருண்ட குழல்களின் தொகுப்பைக் கொண்டுள்ளது .
- இக்குழல்களில் விந்து செல்கள் முதிர்ச்சியடையும்போது, அவை சேகரிக்கும் நாளங்களில் தேக்கப்பட்டு, எபிடிடைமிசுக்குக் கடத்தப்படுகின்றன .
- இருபக்க விந்து நாளங்களும் சிறுநீர்ப்பைக் கு சற்று கீழே சிறுநீர் வடிகுழாயில் இணைகின்றன .
- சிறுநீர் வடிகுழாய் பின்னோக்கி சென்று, ஆண்குறியில் சேர்கிறது.
- இனப்பெருக்கத்தில் பங்குகொள்ளும் மூன்று துணைச் சுரப்பிகள் உள்ளன.
- 1. புராஸ்டேட் சுரப்பி, 2. கௌப்பர் சுரப்பி ,3. கழிவிடச் சுரப்பி.

14. தாவரங்களின் கடத்துதல் மற்றும் விலங்குகளின் சுற்றோட்டம்

1.தாவரங்கள் எவ்வாறு நீரை உறிஞ்சுகின்றன விவரி.

வேர்த்தூவி: தாவர நுனியில் காணப்படும் உறுப்பு மண்ணிலிருந்து நீரையும், கனிமங்களையும் உறிஞ்சுகின்றன. மென்மையானவை, மெல்லிய சுவருடையவை, ஒரு செல்லால் ஆனவை.

உறிஞ்சப்பட்ட நீர் வேரில் செல்லும் பாதை

வேர்த்தூவி ⟶ செல் ⟶ புறணிச் செல் ⟶ சைலக் குழாய்

2.நீராவிப் போக்கு என்றால் என்ன? நீராவிப் போக்கின் முக்கியத்துவத்தை எழுதுக.

நீரானது இலையின் புறத்தோல் துளை வழியாக ஆவியாக வெளியேறுவதை நீராவிப் போக்கு எனப்படும்.

முக்கியத்துவம்

1.ஒளிச்சேர்க்கைக்கு நீர் கிடைக்கிறது.

2. கனிமங்கள் தாவரத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் செல்ல உதவுகிறது.

3.இலைகளின் மேற்பரப்பு குளிர்ச்சியாக இருக்க உதவுகிறது.

2. லியூக்கோசைட்டுகள் துகள்கள் உடையவை மற்றும் துகள்களற்றவை என வகைபடுத்தப்பட்டுள்ளன ஏன்? அவற்றின் பெயர்களையும் பணிகளையும் குறிப்பிடுக. MAY-2022

இரத்த வெள்ளையணுக்கள் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

1. துகள்களுடைய செல்கள் 2. துகள்களற்ற செல்கள்

- **துகள்களுடைய செல்கள் : இவை சைட்டோபிளாசத்தில் துகள்களைக் கொண்டுள்ளன. இவற்றின் உட்கருக்கள் ஒழுங்கற்றவை அல்லது கதுப்புக்களுடையவை.**
- **இவை மூன்று வகைப்படும்**
- **i. நியூட்ரோஃபில்கள் ii. ஈசினோஃபில்கள் iii. பேசோஃபில்கள் (i) நியூட்ரோஃபில்கள் - நோய்த்தொற்று மற்றும் வீக்கத்தின் போது இவற்றின் எண்ணிக்கை அதிகரிக்கிறது.**
- **(ii) ஈசினோஃபில்கள் நச்சுகளை அழித்தல் மற்றும் நச்சு முறிவினை ஏற்படுத்துவது.**
- **(iii)பேசோஃபில்கள்- வீக்கங்கள் உண்டாகும் போது வேதிப்பொருள்களை வெளியேற்றுகின்றன.**

✓ **துகள்களற்ற செல்கள் : இவற்றின் சைட்டோபிளாசத்தில் துகள்கள் காணப்படுவதில்லை.**

✓ **இவை இரண்டு வகைப்படும். i. லிம்ஃபோசைட்டுகள் ii மோனோசைட்டுகள்**

✓ **(i) லிம்ஃபோசைட்கள் - எதிர்ப்பொருளை உருவாக்குகின்றன.**

✓ **(ii) மோனோசைட்டுகள் - இவை விழுங்கு செல்களாதலால் பாக்டீரியாவை விழுங்குகின்றன.**

4)இரத்தத்தின் பணிகளை பட்டியலிடுக. SEP-2021

1. நோய்தாக்குதலிருந்து உடலை பாதுகாக்கிறது.

2.உடலின் வெப்பநிலை மற்றும் P^H ஐ ஒழுங்குபடுத்தும்.

3.உடலின் நீர்ச்சமநிலையை பராமரிக்கிறது.

4.ஹார்மோன்களை கடத்துகிறது.

5.சுவாச வாயுக்களை கடத்துகிறது.

6. கழிவுப் பொருட்களை கடத்துகிறது. (யூரியா, யூரிக் அமிலம், நைட்ரஜன்)

15. நரம்பு மண்டலம்

1. விரிவாக விடையளி நான்கு மதிப்பெண்கள் வினாவிடை

அ. நரம்பு மண்டலத்தின் மூவகை உட்கூறுகளை எழுதுக.

ஆ. நரம்பு மண்டலத்தின் செயல் அலகு யாது?

1. நியூரான்கள் அல்லது நரம்பு செல்கள்
   - மனித உடலின் மிக நீளமான செல்
   - இவை சுமார் 100 வரை நீளமுடையது
   - தூண்டல்களை அரிய உணர்வுகளைக் கடத்த
   - தகவல்கள் மின் தூண்டல்களாகக் கடத்தப்படுகிறது

2. நியூரோகிளியா
   - கிளிப் செல்கள் என்றும் அழைக்கப்படுகின்றன
   - நரம்பு மண்டலத்தின் துணை செல்கள் ஆகும்
   - நியூரான்கள் போன்று செயல்படுவதில்லை

3. நரம்பு நாரிழைகள்
   - நியூரான்களின் மிக நீளமான மெல்லிய செயல்படும் பகுதி
   - பல நரம்பு நாரிழைகள் ஒன்றிணைந்து கற்றையாக செயல்படும்

ஆ. நரம்பு மண்டலத்தின் செயல் அலகு – நியூரான்கள்

2. முகுளத்தின் கீழ்புறத்தில் தொடங்கும் உருளையான அமைப்பு A கீழ்புறமாக நீண்டுள்ளது. இது B என்னும் எலும்புச் சட்டகத்துக்குள் C என்ற உறைகளால் போர்த்தப்பட்டுள்ளது. A யிலிருந்து D எண்ணிக்கையிலான இணை நரம்புகள் இணைந்து வருகின்றன.

அ. A என்பது எந்த உறுப்பைக் குறிக்கிறது ஆ. B எனப்படும் எலும்புச் சட்டகம் மற்றும்

C எனப்படும் உறைகளின் பெயர்களைக் கூறுகஇ. D என்பது எத்தனை இணை நரம்புகள்

விடைகள்:

1. A என்பது தண்டுவடம் ஆகும்.

2.அ B எனப்படும்ட எலும்புச் சட்டகம் முதுகெலும்புபிலுள்ள முள்ளொலும்புத் தொடர்

2.ஆ C என்பது டியூராமேட்டர், அரக்னாய்டு உறை, பையா மேட்டர்

3. D என்பது 31 இனை தண்டுவட நரம்புகள்

3. நம் உடலில் அதிகமான அளவு காணப்படும் நீளமான செல்கள் L ஆகும். L செல்களில் நீண்ட கிளைத்த பகுதி M என்றும் குறுகிய கிளைத்த பகுதி N என்றும் அழைக்கப்படுகிறது. இரண்டு L செல்களுக்கிடையேயான இடைவெளி பகுதி O என்று அழைக்கப்படும். இந்த இடைவெளிப்பகுதியின் வெளியிடப்படும் வேதிப்பொருளான P நரம்புத்தூண்டலை கடத்த உதவுகிறது.

1. L செல்களின் பெயரைக்கூறு
2. M மற்றும் N என்பவை யாவை
3. O என்னும் இடைவெளி பகுதியின் பெயர் என்ன?
4. P எனப்படும் வேதிப்பொருளின் பெயரைக் கூறுக

விடைகள்

1. L நரம்பு செல்
2. M டென்ட்ரைடுகள்
   N ஆக்ஸான் கிளைத்த முடிவுப்பகுதி அல்லது சினாப்டிக் குமிழ்
3. O ரேண்வீரின் கணுக்கள்
4. P நரம்புணர்வு கடத்திகள் அல்லது நியூரோடிரான் மீட்டர்கள்
5. **உனது கையை யாராவது சிறு ஊசி மூலம் குத்தும் போது நீ என்ன செய்வாய்? என்பதையும் இந்த நரம்பு தூண்டல் செல்லக்கூடிய பாதையை படம் வரைந்து பாகங்களுடன் விளக்குக**



உடனே கை இழுத்துக் கொள்ளப்படும்

உணர்வு ஏற்பிகள் மூலம் உணரப்பட்டு உணர் நரம்பு செல்களில் தூண்டலை ஏற்படுத்துகிறது

5. தண்டுவடத்தின் அமைப்பினை விவரி

- தண்டுவடம் குழல்போன்ற அமைப்பு
- முதுகெலும்புகளின் உள்ளே முள்ளொலும்புத் தொடரின் குழலுக்குள் அமைந்துள்ளது
- மூவகை சவ்வுகளால் சூழப்பட்டுள்ளது.
- முகுளத்தின் கீழ்புறம் தொடங்கி இடுப்பு எலும்பின் கீழ்புறம் வரை உள்ளது
- கீழ்புறம் மெல்லிய நார்கள் இணைந்த பைலம் டெர்மினலே பகுதி காணப்படுகிறது
- தண்டுவடத்தின் உட்புறம் தண்டுவடத் திரவத்தால் நிரம்பியுள்ள குழல் உள்ளது. இது மையக்குழல் ஆகும்.

6. **ஒரு நியூரானிலிருந்து மற்றொரு நியூரானுக்கு நரம்புத் தூண்டல்கள் எவ்வாறு கடத்தப்படுகிறது?**

- உணர் உறுப்புகள் மூலம் புறச் சூழ்நிலையில் இருந்து பெறப்படும் தூண்டல்கள் மின் தூண்டல்களாக நியூரான்கள் வழியே கடத்தப்படுகின்றது.
- இத்தூண்டல்கள் டென்ட்ரான் முனை வழியாக ஆக்ஸான் முனையை அடைகிறது
- ஆக்ஸான் முனையானது நரம்புக் கடத்திகளை வெளியிடுகிறது
- இவை டென்ட்ரான்களை அடைந்து செல் உடலத்தில் மின்தூண்டலாக கடத்தப்படுகிறது.
- தொடர்ந்து கடத்தப்பட்டு மூளை அல்லது தண்டுவடத்தை சென்றடைகின்றன

7. **அ. நியூரானின் அமைப்பை படத்துடன் விவரி**

ஆ. நியூரான் அவற்றின் அமைப்பில் வகையில் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது



படம் 15.1 நியூரான் அமைப்பு

ஆ. அமைப்பு

நியூரானின் மூன்று பகுதிகள்

1. சைட்டான்
2. டென்ட்ரைடுகள்
3. ஆக்சான்

1. சைட்டான்

- இது செல் உடலம் அல்லது பெரிகேரியோன் என்று அழைக்கப்படுகிறது
- சைட்டோ பிளாசம் நிரம்பியுள்ள பகுதி நியூரோபிளாசம் எனப்படும்
- இதில் நிசில் துகள்கள் உள்ளன

2.டென்ட்ரைடுகள்

- இது செல் உடலத்தில் வெளியே பல்வேறு கிளைத்த பகுதிகள்
- நரம்புத் தூண்டல்களை சைட்டானை நோக்கி கடத்துகின்றன.

3. ஆக்சான்

- ❖ தனித்த நீளமான மெல்லிய அமைப்பு
- ❖ இதன் முடிவுப்பகுதி சினாப்டிக்குமிழ்
- ❖ மேல்புறம் மையலின் உறையால் போர்த்தப்பட்டுள்ளது.
- ❖ மையலின் உறையின் இடைவெளிப்பகுதி ரேண்வீர் கணுக்கள் எனப்படும்

ஆ. அமைப்பின் அடிப்படையில் நியூரான்களின் வகைகள்

1. ஒருமுனை நியூரான்கள் - வளர் கருவின் ஆரம்பநிலையில் மட்டும் காணப்படும். முதிவு உயிரிகளில் காணப்படாது.
2. இருமுனை நியூரான்கள் - கண்ணின் விழித்திரையிலும் நாசித்துளையிலும் காணப்படும்.
3. பலமுனை நியூரான்கள் - மூளையின் புறப்பரப்பான பெருமூளைப் புறணியில் காணப்படும்.

8.மூளையின் அமைப்பு மற்றும் பணிகள் படத்துடன் விவரி



படம் 15.5 மனித மூளையின் அமைப்பு

மூளை - உடலின் அனைத்து செயல்களையும் கட்டுப்படுத்தும் மையம்
-மண்டையோட்டின் உள்ளேயும் முள்ளொலும்புக் கால்வாயினுள்ளும் அமைந்துள்ளது
மூன்று பாதுகாப்பு உறைகளால் சூழப்பட்டுள்ளது.
அவை: டியூரா மேட்டர், அரக்னாய்டு உறை, பையா மேட்டர்

மூன்று பகுதிகள்

1. முன்மூளை 2. நடுமூளை 3. பின்மூளை

	அமைப்பு	**பணிகள்**
1	பெருமூளைப்புறணி	உணர்வுகள், தன்னிச்சையான செயல்கள், சிந்தித்தல், நினைவுத்திறன், கற்பனைத்திறன்
2	தலாமஸ்	கடத்தும் மையம்
3	ஹைபோதலாமஸ்	உடல்வெப்பநிலையைக் கட்டுப்படுத்துதல், பசி, தாகம், சிறுநீர் வெளியேறுதல், நரம்பு மண்டலம் - நாளமில்லாச் சுரப்பு மண்டலம் இணைப்புச் செயல்
4	சிறுமூளை	உடல் சமநிலை, தசைகளின் தன்னிச்சையான செயல்கள்
5	பான்ஸ் மற்றும் முகுளம்	உறக்க – விழிப்பு சுழற்சி, இதயத்துடிப்பு சுவாசம், செரித்தல் - கட்டுப்படுத்துதல்

9. நியூரான்களின் வகைகளைக் கூறுக . அவை காணப்படும் இடங்களைக் கூறுக . SEP-2020

1. ஒருமுனை நியூரான்
2. இருமுனை நியூரான்
3. பலமுனை நியூரான்

காணப்படும் இடங்கள் :

- ஒருமுனை நியூரான் – வளர்கருவின் ஆரம்ப நிலையில் .
- இருமுனை நியூரான் – கண்ணின் விழித்திரை மற்றும் நாசித் துளையில் உள்ள ஆல் பாக்டரி எபிதீலியத்தில் .
- பலமுனை நியூரான் – மூளையின் புறப் பரப்பான பெருமூளை புரணியில் .

16. தாவர மற்றும் விலங்கு ஹார்மோன்கள்

1. ஜிப்ரல் லின்களின் வாழ்வியல் விளைவுகள் யாவை ?

- தாவரங்களின் மீது ஜிப்ரல்லின்களைத் தெளிக்கும்போது, அது கணுவிடைப்ப குதியின் அசாதாரண நீட்சியைத் தூண்டுகிறது. (எமக்காச்சோளம் மற்றும் (கா. .பட்டாணி
- நெருங்கிய இலையடுக்கம் கொண்ட தாவரங்களின் மீது ஜிப்ரல்லின்களைத் தெளிக்கும் போது, திடீரென தண்டு நீட்சியடைவதும் அதனொடர்ச்சியாக மலர்தலும் நிகழ்கின்றன இதற்கு . போல்டிங்)Bolting) என்று பெயர்.
- ஜிப்ரல்லின்கள் இருபாலிணைந்த தாவரங்களில் (ஓரில்லத் தாவரங்களில் (ஆண் மலர்கள் தோன்றுவதை ஊக்குவிக்கின்றன .(வெள்ளரி)
- ஜிப்ரல்லின்கள் உருளைக் கிழங்கின் உறக்க நிலையை நீக்குகின்றன.
- விதைகளற்ற கனிகளைத் - கருவுறாக்கனிகள்) கருவுறுதல் நடைபெறாமலேயே கனிகள் உருவாதல்தூண் (டுவதில் ஆக்சின்களைவிட ஜிப்ரல்லின்கள் திறன் மிக்கவைதக்கா (கா.எ) .ளி.

2.எத்திலினின் வாழ்வியல் விளைவுகள் யாவை ?

- எத்திலின் கனிகள் பழுப்பதை ஊக்குவிக்கிறது. தக்காளி-, ஆப்பிள், மா, வாழை.
- எத்திலின் இருவிதையிலைத் தாவரங்களில் வேர் மற்றும் தண்டு நீட்சி அடைவதைத் தடைசெய்கிறது.
- எத்திலின் இலைகள் மற்றும் மலர்கள் மூப்படை வதை விரைவுபடுத்துகிறது.
- எத்திலின் இலைகள், மலர்கள் மற்றும் கனிகளில் உதிர்தல் அடுக்கு உற்பத்தியாவதைத் தூண்டுகிறதுஇதனால் இவை முதிர்ச்சி . அடையும் முன்னரே உதிர்ந்துவிடுகின்றன.
- எத்திலின் மொட்டுகள், விதைகளின்உறக்கத்தை நீக்குகிறது .

17. தாவரங்களில் மற்றும் விலங்குகளில் இனப்பெருக்கம்

1. பூக்கும் தாவரங்களில் நடைபெறும் பால் இனப்பெருக்கத்தின் நிகழ்வுகளை எழுதுக.

(i) மகரந்தச்சேர்க்கை (ii) கருவுறுதல்

(அ) முதல் நிகழ்வின் வகைகளை கூறுக.

(i) தன்மகரந்த சேர்க்கை

(ii) அயல் மகரந்தச் சேர்க்கை

(ஆ) அந்நிகழ்வின் நன்மைகள் மற்றும் தீமைகளைக் குறிப்பிடுக.

தன் மகரந்தச் சேர்க்கையின் நன்மைகள்

- ❖ இருபால் மலர்களில் நடைபெறுகிறது
- ❖ புறக்காரணிகளை சார்ந்திருக்கத் தேவையில்லை
- ❖ மகரந்தத்தூள் வீணாவதில்லை

தன் மகரந்தச் சேர்க்கையின் தீமைகள்

- ❖ விதைகள் குறைந்த எண்ணிக்கையில் உருவாகிறது.
- ❖ கருவூண் மிகச்சிறியது
- ❖ புதியவகை தாவரம் உருவாகாது

அயல் மகரந்தச் சேர்க்கையின் நன்மைகள்

- ❖ வலிமையான புதிய வகைத் தாவரங்கள் உருவாகின்றன.
- ❖ நன்கு முளைக்கும் திறன் கொண்ட விதைகள் உருவாகின்றன.

அயல் மகரந்தச் சேர்க்கையின் தீமைகள்

- ❖ புறக்காரணிகளை நம்பி இருப்பதால் மகரந்தச்சேர்க்கை தடைபடுகிறது.
- ❖ மகரந்தத்தூள் வீணாகிறது
- ❖ சில தேவையில்லாத பண்புகள் தோன்றுகின்றன
- ❖ மலர்கள் புறக்காரணிகளைச் சார்ந்து இருக்கின்றன

2. விந்தகம் மனிதனில் வயிற்றுக் குழிக்கு வெளிப்புறத்தில் அமைந்திருப்பதன் காரணம் என்ன? அவற்றை கொண்டிருக்கும் பையின் பெயரென்ன?

- ❖ விந்துசெல் உற்பத்திக்கு உடல் வெப்பநிலையை விடக் குறைந்த வெப்பநிலை தேவைப்படுகிறது.
- ❖ விந்தகத்தின் பை போன்ற அமைப்பு விதைப்பை ஆகும்.

3. மாதவிடாய் சுழற்சியின் லூட்டியஸ் நிலை, சுரப்புநிலை என்றும் அழைக்கப்படுவதன் காரணம் என்ன?

- ❖ அண்ட அணு வெளியேற்றத்திற்கு பிறகு கார்பஸ்லூட்டியம் பெரிதாகி புரோஜெஸ்டிரானை சுரக்கிறது.
- ❖ புரோஜெஸ்டிரான் கருப்பையின் எண்டோமெட்ரிய உட்சுவரின் மீது செயல்பட்டு அண்ட அணுவைப் பெற்று பராமரிக்கும் வகையில் எண்டோமெட்ரியத்தை தயார்படுத்துகிறது.
- ❖ கருவுற்ற பெண்ணின் கர்ப்பநிலையைப் பாதுகாப்பதிலும் கருப்பை சுருங்கி விரிதல் தன்மையை நிறுத்தி வைப்பதிலும் புரோஜெஸ்டிரான் முக்கியப் பங்கு வகிக்கிறது.
- ❖ ஆதலால் இதனை சுரப்புநிலை என்கிறோம்

4. மாதவிடாய் சுழற்சியின் நிலைகள் யாவை? அந்நிலைகளின் போது அண்டம் மற்றும் கருப்பையில் நிகழும் மாற்றங்களை குறிப்பிடுக. PTA-QN

பெண்களின் வாழ்வில் இனப்பெருக்க காலத்தில் நிகழும் சுழற்சி முறையிலான கால ஒழுங்கு மாற்றமே மாதவிடாய் சுழற்சி எனப்படும்.

மாதவிடாய் சுழற்சியின் நிலைகள் மற்றும் மாற்றங்கள்

(i) மாதவிடாய் (அல்லது) அழிவு நிலை

- 4 – 5 நாட்கள்
- முதல்நிலை பாலிக்கள் வளர்ச்சி
- எண்டோமெட்ரியம் உரிந்து இரத்தப்போக்கு
- புரோஜெஸ்டிரான் மற்றும் ஈஸ்ட்ரோஜன் அளவு குறைதல்

(ii) பாலிக்குலார் அல்லது பெருக்கநிலை

- 6 – 13 நாட்கள்
- முதிர்ச்சியடைந்த கிராபியன் பாலிக்கிள்களாதல்
- எண்டோமெட்ரியம் புத்தாக்கம் பெறுதல்
- குளுர் மற்றும் ஈஸ்ட்ரோஜன் அதிகரிப்பு

(iii) அண்டம் விடுபடும் நிலை

- 14ம் நாள்
- கிராபியன் பாலிக்கிள் வெடித்து அண்டம் விடுபடுதல்
- எண்டோமெட்ரியத்தின் சுவர் தடிமனாகிறது
- LH ன் உச்சநிலை

(iv) லூட்டியஸ் நிலை அல்லது உற்பத்தி நிலை

- 15 – 28 நாள்கள்
- காலியான கிராபியன் பாலிக்கிள் வளர்ச்சியுற்று கார்ப்பஸ் லூட்டியமாதல்
- கருவுறுதல் நிகழ்ந்தால் எண்டோமெட்ரியம் கருபதிவுக்கு தயாராகிறது.
- LH, FSH மற்றும் புரோஜெஸ்டிரான் குறைந்து மாதவிடாய் ஏற்படும்.

5. பூக்கும் தாவரத்தில் உள்ள மகரந்தத்தூள் முளைத்து மகரந்தக் குழாயை உருவாக்குகிறது. இது இரண்டு ஆண் கேமீட்டுகளை எடுத்துச் செல்கிறது. அண்டச் செல்லுடன் கருவுறுதல் நடைபெறுவதற்கு ஒரே ஒரு ஆண் கேமீட் மட்டும் போதுமெனில் இரண்டு ஆண் கேமீட் ஏன் எடுத்துச் செல்லப்படுகிறது?

- பூக்கும் தாவரத்தில் மகரந்தக் குழலானது இரண்டு ஆண் கேமீட்டுகளை எடுத்துச் செல்கிறது.
- ஒரு ஆண் இனச்செல் அண்டத்துடன் இணைந்து இரட்டைமய சைகோட்டை தோற்றுவிக்கிறது.
- மற்றோர் ஆணினச் செல் இரட்டைமய உட்கருவுடன் இணைந்து முதன்மை கருவூண் உட்கருவை தோற்றுவிக்கிறது.
- இந்த கருவூண், உருவாகும் கருவிற்கு ஊட்டமளிக்கின்றது.
- எனவே இரண்டு ஆண் கேமீட் எடுத்துச் செல்லப்படுகிறது.

6.பருவமடைதலுக்கு முன்னரும், கர்ப்பத்தின் போதும் மாதவிடாய் சுழற்சி நிகழ்வதில்லை ஏன்?

- ❖ பருவமடைதலுக்கு முன்பு கருப்பையானது ஆயிரத்திற்கும் மேற்பட்ட முதிர்ச்சி அடையாத முட்டைகளைப் பெற்றிருப்பதாலும் மேலும் பாலியல் ஹார்மோனின் சுரப்பு இல்லாததாலும் மாதவிடாய் சுழற்சி நடைபெறுவதில்லை.
- ❖ கர்ப்ப காலத்தின் போது கார்பஸ்லூட்டியத்தால் சுரக்கப்படும் புரோஜெஸ்டிரான் எனும் ஹார்மோன் கருப்பை சுவரை தடிமனாக்குவதாலும், மற்ற பாலிக்கிள்கள் முதிர்ச்சி அடைவதைத் தடுப்பதாலும் மாதவிடாய் சுழற்சி நடைபெறுவதில்லை.

18. மரபியல்

விரிவான விடையளி

1. தகுந்த எடுத்துக்காட்டுடன் இரு பண்புக் கலப்பை விளக்குக. இது ஒரு பண்புக் கலப்பிலிருந்து எவ்வகையில் வேறுபடுகிறது?



படம் 18.2 இரு பண்பு கலப்பு

- ➢ இருபண்பு கலப்பு
- ➢ இரண்டு இணை எதிர் எதிரான பண்புகளை பற்றிய கலப்பு இருபணு கலப்பு எனப்படும்.

  விளக்கம்

- ➢ உருண்டை வடிவம், மஞ்சள் நிற விதை தாவரத்தையும் சுருங்கிய வடிவம் பச்சை நிற விதையும் கலப்பு செய்தார்.
- ➢ F1 சந்ததியில் உருண்டை மஞ்சள் RrYy
- ➢ உருண்டை மஞ்சள் தாவர ஓங்கு பண்பு
  சுருங்கிய பச்சை ஒடுங்கிய பண்பு
- ➢ F2 நான்கு விதமான தாவரம்
- ➢ புறத்தோற்றம் விகிதம் 9:3:3:1
- ➢ வேறுபாடு

ஒரு பண்பு கலப்பு	இருபண்புகலப்பு
புறத்தோற்ற விகிதம் 3:1 எ.கா. நெட்டை, குட்டை	9:3:3:1 விதை நிறம் மஞ்சள், பச்சை வடிவம் உருண்டை சுருங்கியது

2. டி.என்.ஏ அமைப்பு எவ்வாறு உருவாகியுள்ளது?

டி.என்.ஏவின் உயிரியல் முக்கியத்துவம் யாது? SEP-2020

1. . டி.என்.ஏ இரண்டு பாலி நியூக்கிளியோட்டைடுகளால் ஆனது
2. நியூக்கிளியோட்டை மூன்று கூறுகளை கொண்டது
   சர்க்கரை மூலக்கூறு , நைட்ரஜன் காரம் பியூரின் பிரிமிடின் ,பாஸ்பேட் தொகுதி
3. மையத்தில் சர்க்கரை பாஸ்பேட்டு, நைட்ரஜன் காரத்தோடு இணைந்து உள்ளது.
4. அடினைன், தயமினுடன் இரு H பிணைப்பால் இணைந்து உள்ளது
5. சைட்டோசைன் குவானைனுடன் மூன்று H பிணைப்பால் இணைந்து உள்ளது
6. ஒவ்வொரு சுற்றும் 34A அளவு உடையது

டி.என்.ஏ முக்கியத்துவம்

- மரபியல் தகவல்களை கடத்துகிறது .
- வளர்ச்சி சார் மற்றும் வாழ்வியல் செயல்பாடுகளை கட்டுப்படுத்துகிறது.

3.குரோமோசோமின் அமைப்பை விவரிக்கவும்



படம் 18.3 குரோமோசோம் அமைப்பு

- ➢ ஒவ்வொரு குரோமோசோமும் இரண்டு ஒத்த இழைகளை உள்ளடக்கிய மெல்லிய, நீண்ட மற்றும் நூல் போன்று அமைப்பாகும். இது சூகாதரி குரோமேட்டுக்கள் எனப்படும்.
- ➢ குரோமோட்டிகள் இனையும் புள்ளி சென்ட்ரோமியர்

- குரோமனிமா என்னற்ற மணி போன்ற குரோமியர்களை கொண்டுள்ளது.
- குரோமோசோமில் DNA, RNA, ஹிஸ்டோன், உலோக அயனிகள் உள்ளது.
- ஸ்பின்டில் நார்கள் குரோமோசோம்களுடன் இணையும் பகுதி முதன்மை சுருக்கம் ஆகும்
- உட்கருமணி உருவாக்கும் பகுதி இரண்டாம் நிலை சுருக்கமாகும்.
- குரோமோசோமின் இறுதி பகுதி டீலோமியர்

4.புதிதாக பிறந்த குழந்தை பாலின நிர்ணயம் ஒரு தற்செயல் நிகழ்வு, தாயோ, தந்தையோ இதற்கு பொறுப்பாக கருத முடியாது, குழந்தையின் பாலினத்தை எத்தகைய இன செல் இணைவு முடிவு செய்கிறது?



தாய் XX வகை கேமீட்டையும், தந்தை XY வகை கேமீட்டையும் உருவாக்குகிறது

ஆண் உருவாக்கும் X கேமிட் பெண்ணின் X கேமிட்டுடன் இணைந்தால் பெண் குழந்தை

ஆண் உருவாக்கும் Y கேமிட் பெண்ணின் X கேமிட்டுடன் இணைந்தால் ஆண் குழந்தை

எனவே குழந்தையின் பாலினத்தை நிர்ணயம் செய்வது ஆண் இன செல் ஆகும்

உயர்சிந்தனை வினாக்கள்

1. கவிதா ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தார். அவரின் குடும்ப மரபினால் அவர் பெண் குழந்தைகளை மட்டுமே பெற்றெடுக்க முடியும். என அவர் குடும்ப உறுப்பினர்கள் கூறினர். அவரின் குடும்ப உறுப்பினர்களின் கூற்று உண்மையா? உங்கள் விடையை நியாயப்படுத்துக

   கூற்று தவறு

   தந்தையின் விந்தணு பாலினத்தை நிர்ணயிக்கிறது

   1. ஆண் கேமீட்டுகளில் இரண்டு வகை உள்ளது 22+X, 22+y
   2. அண்டம் x குரோமோசோம் கொண்ட விந்தணு உடன் இணைந்தால் xx பெண்
   3. அண்டம y குரோமோசோம் கொண்ட விந்தணு உடன் இணைந்தால் xy ஆண்

19. உயிரின் தோற்றமும் பரிணாமமும்

1. பரிணாமத்திற்கான உந்துவிசையாக இயற்கைத் தேர்வு உள்ளதுஎவ்வாறு .? PTA-QN

அதிக இனப்பெருக்கத்திறன்:

- உயிரினங்கள், அதிக அளவு உயிரிகளை இனப்பெருக்கம் செய்து தங்களுடைய சந்ததியை உருவாக்கும் திறன் பெற்றவை.
- அவை பெருக்கல் விகித முறையில் இனப்பெருக்கம் செய்யும் ஆற்றல் உடையவை.
- இது இனப்பெருக்கத் திறனை அதிகரித்து அதிக உற்பத்திக்கு வழிவகுக்கிறது.

வாழ்க்கைக்கான போராட்டம்:

- அதிக உற்பத்தி காரணமாக, இனத்தொகை அதிகரிக்கிறது. உயிரினங்கள் வாழத் தேவையான இடமும், உணவும் அதே அளவில் மாறாமல் உள்ளது.
- இது உயிரினங்களுக்கான உணவு மற்றும் இடத்திற்கான தீவிர போட்டியை உருவாக்கி, போராட்டத்திற்கு வழிவகுக்கிறது.
- இது மூன்று வகைப்படும்.
  - (அ)ஒரே சிற்றின உயிரினங்களுக்கு இடையேயான (போராட்டம்ஒரே சிற்றினத்தைச் சேர்ந்த : உயிரிகளுக்கு இடையேயான போட்டி.
  - (ஆ)இரு வேறுபட்ட சிற்றினங்களுக்கு இடையேயான (போராட்டம்ஒன்றாக ஒரே இடத்தில் வாழக்கூடிய : வெவ்வேறு சிற்றினத்தைச் சார்ந்த உயிரிகளுக்கு இடையேயான போட்டி
  - (இ)அதிக வெப்பம் அல்லது :சூழ்நிலை போராட்டம் (குளிர், வறட்சி மற்றும் வெள்ளம் போன்ற இயற்கை சூழலும் உயிரினங்களின் வாழ்வியலை பாதிக்கின்றன.

வேறுபாடுகள் :

❖ வேறுபாடுகளுடன் காணப்படுவது அனைத்து தாவரங்கள் மற்றும் விலங்குகளின் சிறப்பு பண்பாகும். பரிணாமத்திற்கு சிறிய வேறுபாடுகள் முக்கியமானவையாக உள்ளன .

❖ டார்வின் கூற்றுப்படி சாதகமான வேறுபாடுகள் உயிரினங்களுக்கு உபயோகமாகவும், சாதகமற்ற வேறுபாடுகள் உயிரினத்திற்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய அல்லது பயன் அற்றவையாகவும் உள்ளன.

iv. தக்கன உயிர் பிழைத்தல் அல்லது இயற்கைத் தேர்வு:

❖ வாழ்க்கைக்கான போராட்டத்தின் போது, கடினமான சூழலை எதிர்கொள்ளக்கூடிய உயிரினங்கள், உயிர் பிழைத்து சூழலுக்கு ஏற்ப தகவமைத்துக் கொள்ளும்கடினமான சூழலை . எதிர்கொள்ள முடியாத உயிரினங்கள் உயிர் பிழைக்கத் தகுதியின்றி மறைந்துவிடும்.

❖ சாதகமான வேறுபாடுகளை உடைய உயிரினங்களைத் தேர்வு செய்யும் இச்செயல்முறை, இயற்கைத் தேர்வு என அழைக்கப்படுகிறது.

சிற்றினங்களின் தோற்றம் :

❖ டார்வின் கூற்றுப்படி, பல தலைமுறைகளாக படிப்படியாக ஏற்பட்ட சாதகமான வேறுபாடுகளின் தொகுப்பினால் புதிய சிற்றினங்கள் உருவாகின்றன.

2. அமைப்பு ஒத்த உறுப்புகளையும் செயல் ஒத்த உறுப்புகளையும் எவ்வாறு வேறுபடுத்துவீர்கள்?

- அமைப்பு ஒத்த உறுப்புகள் : ஒரே மாதிரியான கரு வளர்ச்சி முறை கொண்ட, பொதுவான முன்னோர்களிடம் இருந்து மரபு வழியாக உருவான உறுப்புகள், அமைப்பு ஒத்த உறுப்புகள் எனப்படும் . எடுத்துக்காட்டு : பாலூட்டிகளின் முன்னங்கால்கள், அமைப்பு ஒத்த உறுப்புகள் ஆகும்எடுத்துக்காட்டாக மனிதனின் . கை, பூனையின் முன்னங்கால், திமிங்கலத்தின் துடுப்பு மற்றும் வௌவாலின் இறக்கை .
- செயல் ஒத்த உறுப்புகள் : செயல் ஒத்த உறுப்புகள் பார்க்க ஒரே மாதிரியாகவும், ஒரே மாதிரியான பணிகளையும் செய்கின்றன . ஆனால் அவை வெவ்வேறு விதமான தோற்றம் மற்றும் கரு வளர்ச்சி முறைகளை கொண்டதாக உள்ளன

3. படிவமாதல் தாவரங்களில் எவ்வாறு நடைபெறுகிறது? PTA-QN

புதை உயிர்ப் படிவமாதலின் வகைகள் : கல்லாதல், அச்சு மற்றும் வார்ப்பு, கார்பனாதல், பதப்படுத்துதல், அழுத்தம் மற்றும் ஊடுருவல்

- கல்லாதல் : சிலிக்கா போன்ற கனிமங்கள், இறந்த உயிரியின் உள்ளே ஊடுருவி, திசுக்களை அழித்து ஒரு பாறை போன்ற புதைப் படிவத்தை உருவாக்குகிறது. எலும்புகளும் மரக்கட்டைகளும் இம்முறையில் படிவம் ஆகின்றன.
- அச்சு மற்றும் வார்ப்பு : தாவரம் அல்லது விலங்கு பாறைகளுக்கு இடையேஅதேஅமைப்பு மாறாமல் பதப்படுத்தப்படுகிறது. படிவுகளுக்கு இடையே உயிரிகள் புதைவுறும்போது நிலத்தடி நீரினால் அவ்வுயிரியின் உடல் சிதைக்கப்பட்டு ஓர்வெற்றிடம் உருவாகிறது. அந்த வெற்றிடத்தில் புதையுண்ட தாவரம் அல்லது விலங்கு போன்ற ஓர் அச்சு ஏற்படுகிறது . இதன் மூலம் நம்மால் அந்த உயிரியின் உள்ளமைப்பை அறிய இயலாது . பின்பு கனிமங்கள் அல்லது படிவங்கள் இந்த வெற்றிடத்தை நிரப்பும். இது .வார்ப்பு எனப்படும்
- பதப்படுத்தல் : பனிக்கட்டி அல்லது மரங்களின் தண்டுப் பகுதியில் கசியும் பிசின் போன்றவற்றில் பதியும் உயிரிகள் அழுகிப் போகாமல் பாதுகாக்கப்படுகின்றன.
- ஊடுருவுதல் அல்லது பதிலீட்டுதல்: சில வேளைகளில் கனிமப் படிவமானது செல் சுவரைத் தாண்டிச் செல்கிறது. இந்தக் கனிம ஊடுருவலானது சிலிகா, கால்சியம் கார்பனேட், மெக்னீசியம் கார்பனேட் போன்ற கனிமங்களால் நிரப்பப்படுகிறது. கடினப் பகுதிகள் கரைக்கப்பட்டு அப்பகுதி கனிமங்களால் நிரப்பப்படுகிறது

20: இனக்கலப்பு மற்றும் உயிர்தொழில் நுட்பவியல்

I. **சடுதி மாற்றத்தை எடுத்துகாட்டுடன் விவரி.**

1. உயிரினத்தின் DNA நியுக்ளியோடைடு வரிசையில் திடீரென மாற்றம் ஏற்படும்
2. சடுதி மாற்றத்தை தூண்டும் காரணிகள் மியுட்டாஜென்கள்
3. இயற்பியல் சடுதி மாற்ற தூண்டிகள்

   X கதிர், α, β, γ கதிர்கள்
4. வேதியியல் சடுதி மாற்ற தூண்டிகள் கடுகு வாயு, நைட்ரேஸ் அமிலம்.
5. கோபால்ட் 60, சீசியம் 137 பயன்படுத்தபடுகிறது.

6. காமா கதிரை பயன்படுத்தி சர்பதி ஸொனாரா என்ற கோதுமை ரகம் உருவாக்கப்பட்டது.
7. அட்டாமிட்டா-2 உவர்தன்மைதாங்கும் திறன், தீங்குயிர் எதிர்ப்பு தன்மை பெற்ற அரிசி ரகம்

2. ஜீன் குளோனிங் தொழில் நுட்பத்தை படத்துடன் விவரி



படம் 20.6 மரபுப்பொறியியல் தொழில்நுட்பம் (ஜீன் குளோனிங்)

1. ஒரு ஜீன் அல்லது DNA துண்டானது, பாக்டீரியா செல்லில் செலுத்தப்படுகிறது.
2. பாக்டீரியா செல் பகுப்படையும் போது, அதனுடன் செலுத்தப்பட்ட DNA பெருக்கம் அடையும்
3. ரெஸ்ட்ரிக்ஸின் நொதி DNA ஐ பிரிக்கும்
4. DNA துண்டை, கடத்தியினுள் செலுத்தி rDNA உருவாக்குதல்
5. விருந்தோம்பி பாக்டீரியாவினுள் மனுசேர்க்கை DNA வை உட்புகுத்தல்.

4. மருத்துவ துறையில் உயிர் தொழில் நுட்பவியலின் முக்கியத்துவம் எழுதுக.

SEP-2021& MAY2022

1. r DNA வை பயன்படுத்தி மருந்து பொருட்களை உற்பத்தி செய்யலாம்
2. இரத்த சர்க்கரை நோய்க்கு இன்சுலின் தயாரித்தல்
3. குழந்தைகளின் குறைபாட்டினை நீக்கும் மனித வளர்ச்சி ஹார்மோனை உற்பத்தி செய்தல்
4. இரத்தம் உறைதலுக்கான காரணிகளை உருவாக்கலாம்
5. இரத்த கட்டிகளை கரைந்து, இதய அடைப்பை நீக்க உதவுகிறது.
6. வெறிநாய்கடி, ஹெப்பாடிடில் B நோயை தடுக்கும் தடுப்பூசியை தயாரிக்கலாம்.

21. உடல்நலம் மற்றும் நோய்கள்

1. **HIV பரவக்கூடிய பல்வேறு விதிகள் யாவை?**

- பாதிக்கப்பட்டவருடன் உடலுறவு
- நோய்தொற்று ஊசிகள் மூலம் பரவுதல்
- நோய் தொற்றுடைய இரத்தம் மற்றும் இரத்தப் பொருட்களை பெறுவதன் மூலம் பரவுதல்
- பாதிக்கப்பட்ட தாயிடமிருந்து சேய்க்கு தாய் சேய் இணைப்புத்திசு மூலம் பரவுதல்.

2. **புற்று செல் சாதாரண செல்லிருந்து எவ்வாறு வேறுபடுகிறது?** **PTA-QN &SEP 2021**

	புற்று செல்	சாதாரண செல்
1	கட்டுபாடற்ற செல்பிரிதல்	கட்டுப்பாடுடைய செல் பிரிதல்
2	அருகிலுள்ள திசுக்களுக்குள் ஊடுருவி நியோபிளாசத்தை உருவாக்குகிறது	அருகிலுள்ள திசுக்களுக்குள் ஊடுருவுவது இல்லை
3	இது வேறுபட்ட செல்களின் தொகுப்பாகும்	இது இயல்பான செல்பிரிதலை மேற்கொள்கிறது.

3. **உடற்பருமன் உள்ளவர்களுக்கு உணவுக்கு கட்டுப்பாடு பரிந்துரைப்பதன் அவசியம் என்ன?**

- குறைந்த கலோரி, கட்டுப்படுத்தப்பட்ட கார்போஹைட்ரேட் கொழுப்பு மற்றும் அதிக நார்ச்சத்துள்ள உணவுகளை உட்கொள்ளுதல்.
- உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், பித்தநோய்கள் இதய நோய் மற்றும் கீழ்வாதம் போன்றவைகளை தடுக்கலாம்

4. **வகை-1 மற்றும் வகை -2 நீரிழிவு நோய்களை வேறுபடுத்துக?**

	வகை – 1 - இன்சுலின் சார்ந்த (IDDM)	வகை -2 இன்சுலின் சாரத (NIDDM)
1	நோயின் தாக்கம் 10-20%	80-90%
2	இளம் பருவத்தில் தொடங்கும்	வயதானோரில் காணப்படுகிறது
3	சாதாரணமான உடல் எடை	உடல்பருமன்
4	கணைய பீட்டா செல்கள் அழிவதால்	இன்சுலினுக்கு பதில்விளைவு புரியாமலிருப்பது
5	இன்சுலினை எடுத்துக் கொள்ளுதல் அவசியமாகும்.	உணவு, உடற்பயிற்சி மற்றும் மருந்துகளால் கட்டுப்படுத்தலாம்

5. இதய நோய்களை தடுக்க மேற்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கூறுக ? SEP2020

- நிறைவுற்ற கொழுப்பு மற்றும் அதிக கொலஸ்ட்ரால் கொண்ட உணவு மற்றும் சாதாரண உப்பு போன்றவற்றை குறைவாக எடுத்துக் கொள்ளல்.
- நார்ச்சத்து மிக்க உணவுக்ள, பழங்கள், காய்களிகள் புரதம் மற்றும் வைட்டமின்கள் அதிக அளவில் எடுத்துக் கொள்ளுதல்.
- நாள்தோறும் உடற்பயிற்சி, நடத்தல் மற்றும் யோகா மேற்கொள்ளுதல்.
- புகையிலை மற்றும் ஆல்கஹாலை தவிர்த்தல்.

6. குழந்தைகளை பாலியல் ரீதியாக தவறாக பயன்படுத்துவதிலிருந்து தடுத்தலை வரிசைப்படுத்துக ?

- தெரியாத அந்நிய நபரிடம் பேசுவது மற்றும் தனியாகவோ அல்லது அருகிலோ செல்லக் கூடாது.
- தனியாக பயணம் செய்யும்போது மிக கவனமாக இருக்க வேண்டும்.
- தெரிந்த அல்லது தெரியாத நபர்களை தொட அனுமதிக்கக் கூடாது.
- பெற்றோருக்கு தெரியாமல் எவரிடமிருந்தும் எந்த பொருளும் வாங்குதல் கூடாது.

7. புற்று நோய் சிகிச்சைக்கான வழிமுறைகளை விவரி ?

- அறுவை சிகிச்சை - மற்ற செல்களுக்கு பரவாமல் நீக்குதல்.
- கதிரியக்க சிகிச்சை - புற்று செல்களை கதிர்வீச்சின் மூலம் அழித்தல்
- வேதிமருந்து சிகிச்சை (கீமோதெரபி) - மருந்துகள் மூலம் செல்பிரிதலை தடுத்து புற்று செல்களை அழித்தல்.
- தடைகாப்பு சிகிச்சை - இண்டர்பெரான் தடைகாப்பு மண்டலத்தை தூண்டுவதன் மூலம் அழித்தல்.

8.இரத்தப் புற்றுநோய் (லியூக்கேமியா) என்றால் என்ன?

- எலும்பு மஜ்ஜை மற்றும் நிணநீர் முடிச்சுகளில் இரத்த வெள்ளையணுக்களை (ருடீஊ) அதிகரிப்பதாகும்.
- இவ்வகை புற்றுநோய் 15 வயதுக்கும் குறைவான குழந்தைகளில் பாதிப்பை ஏற்படுத்துகிறது

9.மது அருந்துபவர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளை சரிசெய்வதற்கான தீர்வை தருக?SEP-2021& MAY 2022

- கல்வி மற்றும் ஆலோசனை - பிரச்சனைகளிலிருந்து விடுபடவும் தோல்விகளை ஏற்றக் கொள்ளவும் உதவும்.
- உடல்செயல்பாடுகள் : நூல்கள் வாசித்தல், இசை, விளையாட்டு யோகா, தியானம் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்தல்.
- பெற்றோர்கள் மற்றும் சக மனிதர்களிடம் உதவியை நாடுதல்.
- சிக்கல் நிறைந்த சூழ்நிலை ஏற்படும் போது உதவி மற்றும் வழிகாட்டுதலைப் பெறுதல்.
- தவறான செயல்கள் குறித்து பேசுவதன் மூலம் தங்களை தடுத்துக் கொள்தல்.

மருத்துவ உதவி :

- உளவியலாளர்கள் மற்றும் மனநல மருந்துவரின் உதவியை நாடுதல்.
- மதுவிலிருந்து விடுபடுதல்
- பிரச்சனைகளிலிருந்து முழுமையாக விடுபட்டு நலமான வாழ்க்கை வாழ்தல்.

10 . இதய நோய்கள் ஏற்படக்காரணம் வாழ்க்கை முறையே ஆகும். இதை சரிசெய்ய தீர்வுகள் தருக?

ஆம், வாழ்க்கை முறையினை மாற்றங்கள் இதய நோய்கள் ஏற்படும் நிகழ்வுகளை மாற்றியமைக்கலாம்.

உணவுக்கட்டுப்பாட்டு மேலாண்மை:

- குறைவான கலோரி கொண்ட உணவினை உட்கொள்ளல் நிறைவுற்ற கொழுப்பு மற்றும் அதிக கொலஸ்ட்ரால் கொண்ட உணவு, குறைவான கார்போஹைட்ரேட்டுகள் மற்றும் சாதாரண உப்பு ஆகியவற்றை குறைவாக உட்கொள்ளல்.
- அதிக அளவு நிறைவுறாத பல் கொழுப்பு அமிலங்கள் (ருகுயு) கொண்ட உணவு அவசியமானதாகும்.
- நார்ச்சத்து மிக்க உணவுகள், பழங்கள், காய்கறிகள் புரதம், கனிமங்கள் மற்றும் வைட்டமின்கள் அதிக அளவில் எடுத்துக் கொள்ளுதல் தேவையாளதாகும்.

உடல் செயல்பாடுகள்:

ஆல்கஹால் பருகுதல் மற்றும் புகைபிடித்தலை தவிர்க்க வேண்டும்.

11. **ஆர்த்ரோஸ்கிளிரோசிஸ் ஏற்படுவதற்கான காரணங்களில் கொழுப்பின் பங்கு என்ன? PTA-QN**

- இரத்த நாளங்களில் கொலஸ்டிரால் படிவதால் ஏற்படுகிறது.
- கொழுப்பு படிதலானது வழக்கமாக குழந்தை பருவத்திலிருந்து தொடங்கி பல ஆண்டுகள் நீடிப்பதால் மெல்லிய கொழுப்பு கீரல்கள் முதல் சிக்கலான நாரிதழை தட்டுகளான பிளேக் வரை உருவாகிறது.
- இதயத் தசைகளுக்கு இரத்தத்தை வழங்குகின்ற பெரிய மற்றும் நடுத்தர அளவுடை தமளிகளைச் சுருங்கச் செய்கிறது.

12. **தினசரி வாழ்க்கையில் உடற்பயிற்சியினை மேற்கொள்வதன் நன்மைகள் யாவை? PTA-QN**

- தசையின் அளவு, திறன் மற்றும் காலம் அதிகரித்தல்
- உடல் பருமனை தடுத்தல்
- தசைகளுக்கு அதிகளவு இரத்தமும், ஆக்ஸிஜனும் செல்கிறது.
- வளர்சிதை மாற்ற செயல்களையும், செரித்தலையும், நரம்பு தசைகள் ஒருங்கிணைப்புச் செயல்களையும் மேம்படுத்துதல்.

22. சுற்றுச்சூழல் மேலாண்மை

1. மழைநீர் சேமிப்பு அமைப்புகள் எவ்வாறு நிலத்தடி நீர்மட்டத்தை அதிகரிக்கச் செய்கின்றன? SEP=2021

- ❖ மழைநீர் சேமிப்பின் முக்கிய நோக்கம் மழைநீர் நிலத்திற்குள் கசிந்து, நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துவது.
- ❖ மழைநீரை மிகச் சிறப்பான முறையில் மேற்கூரைகளிலிருந்து சேமிக்கலாம்.
- ❖ மேற்கூரைகளில் பெறப்படும் நீர் சேகரிக்கப்பட்டு கசிவு நீர் குழிகள் மூலம் மண்ணுக்குள் ஊடுருவி நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தும்.
- ❖ உபரி மழைநீரை ஏரிகள் அமைத்து மழை நீரை சேமிப்பதனால் நிலத்தடி நீர்மட்டம் உயரும்.
- ❖ கிராமப்புறத்திலும் சிறிய அளவிலான மழைநீரை சேமிக்கும் விதமாக ஊரணிகள் அமைத்தல்.

2. மண்ணரிப்பை நீவிர் எவ்வாறு தடுப்பீர்?

- ❖ தாவரப் பரப்பை நிலை நிறுத்திக் கொள்ளுதல்
- ❖ கால்நடைகளின் அதிகமான மேய்ச்சலைக் கட்டுப்படுத்துதல்.
- ❖ நிலப்பரப்பில் ஓடும் நீரினை நீர்பிடிப்புப் பகுதிகளில் சேமித்தல்.
- ❖ காடுகள் உருவாக்கம், மலைகளில் நிலத்தை சமப்படுத்துதல், நீரோட்டத்திற்கு எதிர்திசையில் மண் உழுவதால்.
- ❖ காற்றின் வேகத்தை மட்டுப்படுத்த அதிகப் பரப்பில் மரங்களை நடுதல்.

3. திடக்கழிவுகள் உருவாகும் மூலங்கள் யாவை? அவற்றினை எவ்வாறு கையாளலாம்?

- ❖ நகர்புற கழிவு, மருத்துவ கழிவு, தொழிற்சாலை கழிவு மற்றும் மின்னணுக் கழிவுகள் திடக்கழிவு மூலங்களாகும்.
- ❖ நிலத்தில் நிரப்புவதால் நிலம் வெகுவாக பாதிக்கப்பட்டு சீர் குலைகிறது.
- ❖ திடக்கழிவுகளை சேகரித்தல், சுத்தப்படுத்துதல் மற்றும் முறையாக வெளியேற்றுவது திடக்கழிவு மேலாண்மையாகும்.
- ❖ இக்கழிவுகளை கையாள 3R முறை ஏற்றதாகும்.

  Reduce – குறைத்தல்

  Reuse – மறுபயன்பாடு,

  Recycle – மறுசுழற்சி

4. காடுகளின் முக்கியத்துவம் பற்றி கூறுக?

- ❖ அரிய தாவரம் மற்றும் விலங்கினங்களின் வாழிடமாகும்.
- ❖ புதுப்பிக்கத்தக்க இயற்கை வளங்களின் ஆதாரமாகும்.
- ❖ உணவு, தீவனம், நார்கள் மற்றும் மருந்துப் பொருட்களை அளிப்பவை.
- ❖ கார்பனை நிலை நிறுத்துவதால் அவை கார்பன்தொட்டி என்றும் அழைக்கப்படுகின்றன.
- ❖ வெள்ளம், நிலச்சரிவு போன்ற இயற்கைச் சீற்றங்களில் இருந்து வன உயிரிகளை பாதுகாக்கிறது.
- ❖ சுற்றுச் சூழல் சமநிலையை பேணுவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

5. மண்ணரிப்பினால் உண்டாகக்கூடிய விளைவுகள் யாவை?

- ❖ தாவர வளர்ச்சிக்கு தேவையான மேலடுக்கு மட்கிய இலை தழைகள் மற்றும் தாது உப்புகள் இழக்கப்படுகின்றன.
- ❖ மண்ணரிப்பினால் நிலச்சரிவு ஏற்படுகின்றது.
- ❖ மண்ணின் மட்கு, ஊட்டப்பொருட்கள், வளம் குறைந்து மண் வளம் குறைகிறது.

13. வனங்களை மேலாண்மை செய்வதும், வன உயிரினங்களை பாதுகாப்பதும் ஏன் ஒரு சவாலான பணியாக கருதப்படுகிறது?

- ❖ சமீப காலங்களில் மனித ஆக்கிரமிப்பின் காரணமாக
- ❖ சட்ட விரோத வேட்டையாடுதல் வன விலங்குகளை பிடித்தல்.
- ❖ பொருளாதார மற்றும் வணிக பொருட்களுக்காக காட்டினை அழித்தல்.

படவினாக்கள்



படம் 2.15 மனிதக்கண்



படம் 2.9 பொருள் F க்கும் C க்கும் இடையே வைக்கப்படும் பொழுது.



படம் 2.8 பொருள் C ல் வைக்கப்படும் பொழுது.



படம் 4.2 எளிய மின் சுற்று படம்



படம் 4.4 ஓம் விதியை விளக்கும் மின்சுற்று

படம் 12.8 பசுங்கணிகத்தின் அமைப்பு



படம் 12.10 மைட்டோகாண்ட்ரியாவின் அமைப்பு



படம் 12.11 ஆக்ஸிசோம்



14.3 வேர்த் தூவிகளுடன் காணப்படும் வேரின் நுனிப்பகுதி



படம் 14.7 திறந்த மற்றும் மூடிய இலைத்துளைகள்



படம் 14.11 மனித இதயத்தின் புறத்தோற்ற அமைப்பு



படம் 14.12 மனித இதயத்தின் உள்ளமைப்பு



படம் 15.5 மனித மூளையின் அமைப்பு



படம் 16.10 கணையம்



படம் 16.8 தைராய்டு சுரப்பி



படம் 16.11 அட்ரினல் சுரப்பி



படம் 17.7 மலரின் பாகங்கள்



படம் 17.8 மகரந்தத்தாள் மற்றும் மகரந்தத்தூளின் அமைப்பு



படம் 17.10 சூலின் அமைப்பு



படம் 17.9 சூலகம்



படம் 17.15 விந்து செல்லின் அமைப்பு



படம் 17.16 அண்டத்தின் அமைப்பு

சில கணக்குகள்

1. 60கிகி நிறையுடைய மனிதனின் எடை புவிபரப்பில் என்ன அளவாக இருக்கும் .

   தீர்வு : $m = 60$கிகி

   $w = mg$

   $= 60 \times 9.8$

   $w = 588\ N$

2. 2.5 கிகி நிறையுள்ள பொருளொன்றின் நேர்கோட்டு உந்தம் 2.5 கிகிமீவி$^{-1}$ எனில் அதன் திசைவேகத்தை கணக்கிடுக .

   தீர்வு :

   $m = 5$ கிகி

   $p = 2.5$ கிகிமீவி$^{-1}$

   நேர்கோட்டு உந்தம் (p) = நிறை (m) x திசைவேகம்(v)

   திசைவேகம் (v)= நேர்கோட்டு உந்தம் (p) / நிறை (m)

   $$= \frac{2.5}{5}$$

   $= 0.5$ மீவி$^{-1}$

3. இரு பொருட்களின் நிறை விகிதம் 3:4 . அதிக நிறையுடைய பொருள் மீது விசையொன்று செயல்பட்டு 12மீவி$^{-1}$ மதிப்பில் அதை முடுக்குவித்தால் அதே விசை கொண்டு மற்ற பொருளை முடுக்குவிக்க தேவைப்படும் முடுக்கம் யாது ?

   தீர்வு : நிறை விகிதம் = 3:4 $m_1 = 3$ கிகி $m_2 = 4$ கிகி

   $a_1 = ?$ $a_2 = 12$ மீவி$^{-2}$

   $F = ma$

   $m_1a_1 = m_2a_2 \implies 3 \times a_1 = 4 \times 12$

   $$a_1 = \frac{4 \times 12}{3}$$

   $a_1 = 16$ மீவி$^{-2}$

4. கீல் முனையில் இருந்து 90 செ.மீ தூரத்தில் கைப்பிடி கொண்ட கதவொன்று 40N விசை கொண்டு திறக்கப்படுகிறது . கதவின் கீல் முனைப் பகுதியில் ஏற்படும் திருப்புத்திறன் மதிப்பினை கணக்கிடு .

தீர்வு : விசை(F) = 40N

தொலைவு (d) = 90 செ.மீ = 0.9 மீ

திருப்புத்திறன் M = விசை(F) X தொலைவு (d)

= 40 X 0.9

= 36 நியூட்டன் மீட்டர்

5. 1 கிகி நிறையுடைய பந்து ஒன்று 10மீவி $^{-1}$ திசைவேகத்தில் தரையின் மீது விழுகிறது . மோதலுக்கு பின் ஆற்றல் மாற்றமின்றி அதே வேகத்தில் மீண்டும் உயர செல்கிறது எனில் அப்பந்தில் ஏற்படும் உந்த மாற்றத்தினை கணக்கிடுக .

தீர்வு : நிறை (m) = 1கிகி

u = 10 மீவி$^{-1}$

v = -10 மீவி$^{-1}$

உந்த மாற்றம் $\Delta p = mv - mu$

$= m (v - u)$

= 1 (-10 - 10)

= 1 (-20)

உந்த மாற்றம் Δp = -20 கிகிமீவி$^{-1}$

6. இரு கோள்களின் நிறை விகிதம் முறையே 2:5 அவைகளின் ஆர விகிதம் முறையே 4:7 எனில் அவற்றின் ஈர்ப்பு முடுக்க விகிதத்தை கணக்கிடுக .

தீர்வு :

நிறை விகிதம் $M_1 : M_2$ = 2:5 ஆர விகிதம் $R_1 : R_2$ = 4:7

ஈர்ப்பு முடுக்க விகிதம் $g_1 : g_2$ = ?

$$g_1 = GM_1/R_1^2$$

$g_2 = GM_2/R_2^2$

$g_1 : g_2 = GM_1/R_1^2 : GM_2/R_2^2$

$= M_1/R_1^2 \times R_2^2/M_2$

$= \frac{2}{16} \times \frac{49}{5}$

$= \frac{98}{80} = \frac{49}{40}$

ஈர்ப்பு முடுக்க விகிதம் $g_1 : g_2 = 49 : 40$

7. ஒரு பொருளில் இருந்து செல்லும் ஒளிக்கற்றையானது 0.3மீ குவியத்தொலைவு கொண்ட விரிக்கும் லென்சால் குவிக்கப்பட்டு 0.2மீ என்ற தொலைவில் பிம்பத்தை ஏற்படுத்துகிறது எனில் பொருளின் தொலைவைக் கணக்கிடுக.

தீர்வு: $f = -0.3$மீ $v = -0.2$மீ

லென்சு சமன்பாட்டிலிந்து

$\frac{1}{f} = \frac{1}{v} - \frac{1}{u}$

$\frac{1}{u} = \frac{1}{v} - \frac{1}{f}$

$\frac{1}{u} = \frac{1}{-0.2} - \frac{1}{-0.3}$

$u = \frac{-6}{10}$

$u = -0.6$ மீ

8. கிட்டப்பார்வை குறைபாடு உடைய ஒரு மனிதரால், 4மீ தொலைவில் உள்ளப் பொருள்களை மட்டுமே காண இயலும். அவர் 20மீ தொலைவில் உள்ள பொருளை அவர் காண விரும்பினால் பயன்படுத்த வேண்டிய குழிலென்சின் குவிய தொலைவு என்ன?

தீர்வு: $x = 4$மீ $y = 20$மீ

பார்வை குறைபாட்டைச் சரிசெய்ய பயன்படுத்த வேண்டிய லென்சின் குவிய தொலைவு

$\frac{1}{f} = \frac{xy}{x-y}$

$f = \frac{4 \times 20}{4-20} = \frac{80}{-16} = -5$ மீ

பார்வை குறைபாட்டைச் சரிசெய்ய பயன்படுத்த வேண்டிய

லென்சின் திறன்

$$P = \frac{1}{f} = -\frac{1}{5} = -0.2\,D$$

9. தூரப்பார்வை குறைப்பாட்டால் பாதிக்கப்பட்ட ஒருவரின் அண்மைப் புள்ளியானது 1.5மீ தொலைவில் உள்ளது . அவருடைய பார்வைக் குறைப்பாட்டை சரி செய்ய பயன்படுத்தப்பட்ட வேண்டிய குவிலென்சின் குவிய தொலைவு கணக்கிடு .

தீர்வு : d=1.5மீ D = 25 செ.மீ = 0.25 மீ

பார்வை குறைபாட்டைச் சரிசெய்ய பயன்படுத்த வேண்டிய லென்சின் குவிய தொலைவு

$$f = \frac{d\ X\ D}{d - D} = \frac{1.5\ X\ 0.25}{1.5 - 0.25} = \frac{0.375}{1.25} = 0.3 \text{ மீ}$$

10. 12 கூலும் மின்னூட்டம் 5 விநாடி நேரம் ஒரு மின்விளக்கின் வழியாக பாய்கிறது எனில் அதன் வழியே செல்லும் மின்னோட்டத்தின் அளவு என்ன ?

தீர்வு : மின்னூட்டம் Q=12 கூலும் காலம் = 5 விநாடி

மின்னோட்டம் $I = \frac{Q}{t} = \frac{12}{5} = 2.4\,A$

11. 10 கூலும் மின்னூட்டத்தை ஒரு மின்சுற்றிலுள்ள இரண்டு புள்ளிகளுக்கிடையே நகர்ந்த செய்யப்படும் வேலை 100J எனில் அப்புள்ளிகளுக்கிடையே உள்ள மின்னழுத்த வேறுபாடு என்ன ?

தீர்வு : மின்னூட்டம் Q=10 கூலும் செய்யப்பட்ட வேலை W = 100J

மின்னழுத்த வேறுபாடு $V = \frac{W}{Q} = \frac{100}{10}$ V = 10 வோல்ட்

12. 10மீ நீளமும் $2 \times 10^{-7}\ m^2$ குறுக்குவெட்டு பரப்பும் கொண்ட கம்பியின் மின்தடை 2 ஓம் எனில் அதன் (i) மின்தடை எண் (ii) மின்கடத்து திறன் மற்றும் (iii) மின் கடத்தி எண் ஆகியவற்றை காண்க .

தீர்வு : நீளம் L = 10மீ மின்தடை R = 2 ஓம்

குறுக்குவெட்டு பரப்பு $A = 2 X 10^{-7}\ m^2$

மின்தடை எண் $\rho = \frac{RA}{L} = \frac{2\ X\ 2\ X\ 10^{-7}}{10} = 4 \times 10^{-7}\,\Omega m$

மின்கடத்து திறன் $G = \frac{1}{R} = \frac{1}{2} = 0.5\ mho$

மின் கடத்தி எண் $\sigma = \frac{1}{\rho} = \frac{1}{4 \times 10^{-8}} = 0.25 \times 10^{8}$ மோ$^{-1}$மீ$^{-1}$

13. 5Ω,3Ω மற்றும் 2Ω மின்தடை மதிப்புகள் கொண்ட மின்தடையாக்கிகள் 10V மின்கலத்துடன் தொடரிணைப்பில் இணைக்கப்பட்டுள்ளது . தொகுபயன் மின்தடை மற்றும் மின்சுற்றில் பாயும் மின்னோட்டத்தையும் காண்க .

தீர்வு: $R_1 = 5\Omega$ $R_2 = 3\Omega$ $R_3 = 2\Omega$ V= 10 V

$R_S = R_1 + R_2 + R_3 = 5+3+2$

$R_S = 10\ \Omega$

மின்னோட்டம் $I = V / R_S = \frac{10}{10} = 1A$

14. 5Ω மின்தடை கொண்ட மின் சூடேற்றி ஒரு மின்மூலத்துடன் இணைக்கப்படுகிறது . 6A மின்னோட்டமானது இந்த சூடேற்றி வழியாக பாய்கிறது எனில் 5 நிமிடங்களில் உருவாகும் வெப்பத்தின் அளவை காண்க.

மின்தடை R = 5Ω மின்னோட்டம் I = 6A

காலம் t = 5 நிமிடங்கள் = 5 x 60 விநாடி = 300 விநாடி உருவாகும்

வெப்பத்தின் அளவு = $H = I^2 R t = 6 \times 6 \times 5 \times 300$

$H = 54000\ J$

15. கீழ்க்கண்ட அணுக்கரு வினையிலிருந்து A,B,C மற்றும் D ஆகியவற்றை க் காண்க.

(i) $_{13}Al^{27} + A \text{-------->} {}_{15}P^{30} + B$

(ii) $_{12}Mg^{24} + B \text{-------->} {}_{11}Na^{24} + C$

(iii) $_{92}U^{238} + B \text{-------->} {}_{93}Np^{239} + D$

- தீர்வு (i) $_{13}Al^{27} + {}_{2}He^{4} \text{-------->} {}_{15}P^{30} + {}_{0}n^{1}$

(ii) $_{12}Mg^{24} + {}_{0}n^{1} \text{-------->} {}_{11}Na^{24} + {}_{1}H^{1}$

(iii) $_{92}U^{238} + {}_{0}n^{1} \text{-------->} {}_{93}Np^{239} + {}_{-1}e^{0}$

- A என்பது ஆல்பாத் துகள், B என்பது நியூட்ரான்,
- C என்பது புரோட்டான் மற்றும் , D என்பது எலக்ட்ரான்.

16. 2 கிகி நிறையுடைய ஒரு கதிரியக்கப் பொருளானது அணுக்கரு இணைவின்போது வெளியாகும் மொத்த ஆற்றலைக் கணக்கிடுக.

தீர்வு : வினையின் போது நிறைவழு $m = 2$ கிகி

ஒளியின் திசைவேகம் $c = 3 \times 108$ மீ வி $^{-1}$

ஐன்ஸ்டீன் நிறை ஆற்றல் சமன்பாடு $E = mc^2$

$$E = 2 \times (3 \times 10^8)^2 = 1.8 \times 10^{17} \text{ J} .$$

17. 80°F வெப்பநிலையை கெல்வின் வெப்ப நிலைக்கு மாற்றுக .

தீர்வு : $K = (F + 460) \times \frac{5}{9}$

$= (80 + 460) \times \frac{5}{9} \qquad = 540 \times \frac{5}{9}$

$= 300$ K

18 . ஒரு மின்சுற்றில் பொருத்தப்பட்டுள்ள 100 W , 200 V மின்விளக்கில் பாயும் மின்னோட்டம் மற்றும் மின்தடையை கணக்கிடு .

தீர்வு : மின்திறன் $P = 100$ W மின்னழுத்தம் $V = 200$ V

மின்திறன் $P = VI \implies$ மின்னோட்டம் $I = \frac{P}{V} = \frac{100}{200} = 0.5$ A

மின்தடை $R = \frac{V}{I} = \frac{200}{0.5} = 400\ \Omega$

19. கப்பலிருந்து அனுப்பப்பட்ட மீயொலியானது கடலின் ஆழத்தில் எதிரொலித்து மீண்டும் ஏற்பியை அடைய 2 விநாடி எடுத்துக் கொள்கிறது . நீரில் ஒலியின் வேகம் 1450 மீவி$^{-1}$ எனில் கடலின் ஆழத்தினை கணக்கிடுக .

தீர்வு : நேரம் $t = 2$ விநாடி திசைவேகம் $v = 1450$ மீவி$^{-1}$

$$d = \frac{v \times t}{2} = \frac{1450 \times 2}{2}$$

$= 1450$ மீ

20 . 0.18 கி நீர் துளியில் உள்ள நீர் மூலக்கூறுகளின் எண்ணிக்கையை கணக்கிடு .

தீர்வு :

$$\text{மூலக்கூறுகளின் எண்ணிக்கை} = \frac{\text{நிறை } X \text{ அவகாட்ரோ எண்}}{\text{மூலக்கூறு நிறை}}$$

நீர்த்துளியில் உள்ள நீர் மூலக்கூறுகளின் எண்ணிக்கை

$$= \frac{0.18 \ X \ 6.023 \ X \ 10^{23}}{18}$$

$$= 0.01 \ X \ 6.023 \ X \ 10^{23}$$

$= 0.06023 \ X \ 10^{23}$ அல்லது $6.023 \ X \ 10^{21}$

21. மோல்களின் எண்ணிக்கையை கணக்கிடுக .

அ) 27 கி அலுமினியம் ஆ) $1.51 \ X \ 10^{23}$ மூலக்கூறு NH_4Cl

தீர்வு :

அ) மோல்களின் எண்ணிக்கை = $\frac{\text{நிறை}}{\text{அணு நிறை}} = \frac{27}{27}$ = 1 மோல்

ஆ) மோல்களின் எண்ணிக்கை = $\frac{\text{மூலக்கூறுகளின் எண்ணிக்கை}}{\text{அவகாட்ரோ எண்}}$

$$= \frac{1.51 \ X \ 10^{23}}{6.023 \ X \ 10^{23}}$$

= 0.25 மோல்

21 . சல்ப்யூரிக் அமிலத்தின்)H_2SO_4) ஒப்பு மூலக்கூறு நிறை யாது?

சல்ப்யூரிக் அமிலமானது இரண்டு ஹைட்ரஜன் அணுக்களாலும்

ஒரு சல்பர் அணுவாலும் நான்கு ஆக்சிஜன் அணுக்களாலும் ஆனது .

ஆகவே, சல்ப்யூரிக் அமிலத்தின் ஒப்பு மூலக்கூறுநிறை

= (2 × ஹைட்ரஜனின் நிறை+ ((1 × சல்பரின் நிறை+ ((4 × ஆக்சிஜனின் நிறை(

= (2 × 1) + (1 × 32) + (4 × 16) = 98

சல்ப்யூரிக் அமிலத்தின் ஒப்பு மூலக்கூறுநிறை = 98

$Ca_3(PO_4)2$ மூலக்கூறு நிறையைக் காண்க.

Caன் அணு நிறை =40, P-ன் அணு நிறை =30, Oன் அணு நிறை =16.

$Ca_3(PO_4)2$ ன் மூலக்கூறு நிறை = (40 × 3) + [30 + (16 × 4)] × 2

= 120 + (94 × 2) = 120 + 188

$Ca_3(PO_4)2$ ன் மூலக்கூறு நிறை =308 கி .

22. நீரின் ஒப்பு மூலக்கூறு நிறை யாது ?

நீர்மூலக்கூறானது 2 ஹைட்ரஜன் அணுவையும் 1 ஆக்சிஜன் அணுவையும் கொண்டுள்ளது.

நீரின் ஒப்பு மூலக்கூறு நிறை

= (2 × ஹைட்ரஜனின் நிறை+ ((1 × ஆக்சிஜனின் நிறை(

= (2 × 1) + (1 × 16) = 18

நீரின் ஒப்பு மூலக்கூறு நிறை = 18.

23. H2SO4 ல் உள்ள S ன் சதவீத இயைபினைக் காண்க

H2SO4 ன் மூலக்கூறு நிறை = (1 × 2) + (32 × 1) + (16 × 4)

= 2 + 32 + 64 = 98 கி

சல்பரின் சதவீத இயைபு = $\frac{\text{சல்பரின் நிறை}}{\text{H2SO4 ன் மூலக்கூறு நிறை}}$ x 100

$= \frac{32}{98} \times 100 = 32.65\%$

சல்பரின் சதவீத இயைபு = 32.65%

பாடங்களைப் படிக்கும் முறைகள்

- ஆசிரியர்கள் சொல்லிக் கொடுக்கும் பாடத்தை மாணவர்கள் அன்றாடம் படிக்க வேண்டும். நாளை படிப்போம் என்று இருக்கக்கூடாது.

- நின்று கொண்டோ, நடந்து கொண்டோ படிக்கக்கூடாது. விரைவில் களைப்பு ஏற்படும். அமைதியான இடத்தில் வசதியாக உட்கார்ந்து படிக்க வேண்டும்.

- உரக்கப் படிக்கக்கூடாது. உரக்கப் படித்தால் விரைவில் களைப்படைவதோடு, தொண்டைப்புண் ஏற்பட்டு காய்ச்சல் வர வாய்ப்புண்டு.

- தொலைக்காட்சி, சினிமா, ரேடியோ, திருவிழா போன்ற நிகழ்ச்சிகள் மாணவர்களின் கவனத்தைச் சிதறடிப்பதற்குக் காரணமாக ஆகிவிடக்கூடாது.

- தேர்வுக் காலங்களில் இரவு முழுவதும் கண் விழித்துப் படிப்பது என்பது தவறான பழக்கமாகும். தேர்வுக்கு முன் இரவில் குறைந்தது ஐந்து மணி நேரம் தூங்க வேண்டும்.

- படிப்பதை ஒப்புவிப்பது தவற்றைத் திருத்திக் கொள்ள உதவாது. நேரம் தான் வீணாகும். எனவே, ஒப்புவித்துப் பார்க்கும் நேரத்தை எழுதிப் பார்ப்பதற்குச் செலவிட வேண்டும்.

- ஒவ்வொரு பாடத்தைப் படித்து முடித்தவுடன் எழுதிப் பார்க்க வேண்டும். எழுதியதைப் புத்தகத்தோடு ஒப்பிட்டுத் தவற்றைத் திருத்திக் கொள்ள வேண்டும். எந்த ஒரு பாடத்தையும் எழுதிப் பார்க்காமல் அடுத்த பாடத்தைப் படிக்கத் தொடங்கக் கூடாது.

- காலாண்டு, அரையாண்டு மற்றும் திருப்புத் தேர்வுகளில் சரியான விடை அளிக்காத வினாக்கள் மற்றும் தவறாக விடையளிக்கப்பட்ட வினாக்களுக்குச் சரியான விடைகளைத் தயார் செய்து கொண்டு படித்து, மீண்டும் எழுதிப் பார்க்க வேண்டும். அடுத்த தேர்வுக்குப் படிப்பதை விட முந்தைய தேர்வுகளின் தவறுகளைத் திருத்திக் கொள்வது அதிகப்பயன் அளிக்கும்.

----- நன்றி -----